1971 ஜூலை 10]

இணைப்பு.

[602-ம் பக்கத்தில் 192-ம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினவிற்குரிய விடையைக் காண்க.]

சென்னை மாநகரில் காலையிலும் மாலையிலும் நெரிசல் நேரங்களில் மட்டுமே அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளில் பயணிகள் கூட்டம் அதிகமாக உள்ளது. எனினும், கூடுதல் போக்குவரத்து வசதிகளை அளிக்கும் நோக்கத்துடன், அரசுப் போக்குவரத்துத் துறை கடந்த ஆண்டில் மேலும் 63 பேருந்துகளை இயக்க ஏற்பாடு செய்துள்ளது— மாநகரில் கடந்த ஆண்டில் 917 பேருந்துகள் ஓடிக்கொண்டிருந்தன. தற்போது 980 பேருந்துகள் ஓட்டப்படுகின்றன. மாநகரில் போக்கு வரத்து நெரிசலைக் குறைக்கும் பொருட்டு, சாதாரண வகைப் பேருந்துகளுடன் கூட, இணைப்புப் பேருந்துகள், மாடிப் பேருந்து, நின்று பயணம் செய்யும் பேருந்துகள் போன்ற அதிக இடவசதி கொண்ட பேருந்துகளும், மகளிர்க்கேயான சிறப்புப் பேருந்துகளும் விடப்படுகின்றன. பயணிகளை வரிசையில் நிறுத்தி வைப்பதற்காக சிரணித் தொண்டர்களும், பேருந்துகள் பயணிகளை விரைவில் ஏற்றிச் செல்லும் வகையில் அப்பயணிகளுக்கு முன்னதாகப் பயணச்சீட்டுகள் வழங்குவதற்காக பேருந்துகள் நிற்கக்கூடிய முக்கியமான இடங்களில் பயணச் சீட்டுக் கொடுப்பவர்களும் அமர்த்தப்படுகின்றனர். பேருந்துகள் திறம்படச் செயலாற்றுவதற்கு இயலும் வகையில் போக்குவரத்துத் துறையிலுள்ள பேணுதல் பிரிவு சீரமைக்கப்பட்டு வருகிறது

There is conjection in the State Transport buses in Madras city only during the peak hours in the morning and evening. However, with a view to providing additional transport facilities, the State Transport Department has put 63 more buses in operation during the last one year—that is the city passengers are now served by 980 buses as against the 917 buses which were in operation during the last year. In addition to the ordinary type buses, larger capacity buses, namely, trailer buses, double decker bus, standee buses and special buses for women are operated in the city to clear the traffic. Prosperity Brigade volunteers and stand conductors are posted in important bus stops for queuing of passengers and for advance issue of tickets to the passengers so that there may be quicker movement of buses. The maintenance organisation of the department is being reorganised for effective maintenance of the buses for better service.